71. தவறான கூற்று எது?

1. பணத்தைக் கொண்டு நாட்டின் வருவாயை அளவிடலாம்.
2. பணம் அனைவரிடமும் பொதுவான ஏற்புத் திறனைக் கொண்டுள்ளது.
3. பணவீக்கம் என்பது பணத்தின் மதிப்பு உயர்ந்து விலைகள் குறைவதைக் குறிக்கும்.
4. பணம் சுதந்திரமாகப் பரவக்கூடியது.

72. வர்த்தகர்கள், வர்த்தக நிறுவனங்கள், பொது அதிகாரிகள் கீழ்க்கண்ட எந்த கணக்கைத் துவக்க வேண்டும்?

1. மாணவர் சேமிப்புக் கணக்கு
2. சேமிப்பு வைப்பு
3. நடப்பு கணக்கு வைப்பு
4. நிரந்தர வைப்பு

73. மாணவர்கள் சேமிப்பு பழக்கத்தை ஊக்குவிக்க கீழ்க்கண்ட எந்த திட்டம் பயன்படுகிறது?

1. சஞ்சாயிகா
2. கிஸான் விகாஸ் பத்திரம்
3. சஞ்சீவினி
4. செல்வமகள்/ செல்வமகன்

74. குழுவில் பொருந்தாததைத் தேர்ந்தெடுக்க.

1. ஆண்டுத்தொகை
2. பரஸ்பர நிதி
3. சொத்துக்கள்
4. நிரந்தர வைப்பு

75. மூலதன உருவாக்கத்திற்கும் வருவாய்க்கும் உதவுவது

1. சேமிப்பு
2. முதலீடு
3. நீர்மை தன்மை
4. இவை எதுவுமில்லை

76. முதலீடு சம்பந்தப்பட்ட கீழ்க்கண்ட கருதுகோள்களில் அடைப்புக் குறிக்குள் உள்ள தவறானதைத் தேர்ந்தெடுக்க.

LIVEWORKSHEETS

இடர்பாடு - [அ) புறக்கணிக்கப்பட்ட அளவு, ஆ) மிக அதிகம்]

வருவாய் - [இ) ஒப்பீட்டளவில் அதிகம், ஈ) குறைவு]

நீர்மை தன்மை - [உ) குறைந்த நீர்மை, ஊ) அதிக நீர்மை]

1. அ, ஊ, இ
2. ஆ, இ, உ
3. ஆ, ஈ, உ
4. அ, ஈ, ஊ

77. கீழ்க்காணும் கூற்றுகளில் எது தவறு?

1. கருப்புப் பணம் என்பது கணக்கில் கொண்டுவராத பணத்தின் ஒரு வடிவமாகும்.
2. வெளிநாட்டு வங்கிகளில் இந்தியர்கள் கருப்புப் பணத்தைப் பதுக்கி வைத்துள்ளனர்.
3. கருப்புப் பணத்தினால் சமுதாயத்தில் பணக்காரர், ஏழைகளிடையே இடைவெளி அதிகமாகிறது.
4. கருப்புப் பணத்திற்கு மிகக்குறைந்த அளவே வரி செலுத்துகின்றனர்.

78. கீழ்க்காண்பவைகளில் எது பொருளாதாரத்தில் கருப்புப் பணத்தின் விளைவுகள் இல்லை?

1. சமுதாயத்தில் பொது ஒழுக்க நிலைகளில் வீழ்ச்சி ஏற்படுகிறது.
2. சமத்துவம் வலுவிழக்கிறது.
3. உற்பத்தி மீதான விளைவுகள் ஏற்படுவதில்லை.
4. வரி ஏமாற்றுதல் மூலம் அரசுக்கு வருவாய் இழப்பு ஏற்படுகிறது.

79. பொருத்துக.

அ) ரியல் எஸ்டேட் சட்டம் - i) 1988

ஆ) ஊழல் தடுப்புச் சட்டம் - ii) 2016

இ) இந்திய ரூபாய் குறியீடு அங்கீகரிப்பு - iii) 2002

ஈ) பண மோசடி தடுப்புச் சட்டம் - iv) 2010

1. அ - i ஆ - ii இ - iii ஈ - iv
2. அ - ii ஆ - iv இ - iii ஈ - i

LIVEWORKSHEETS

3. அ - ii ஆ - i இ - iv ஈ - iii 4. அ - iv ஆ - iii இ - i ஈ - ii

80 கருப்புப் பணத்திற்கு எதிராக எந்த நாடு தன் நாட்டுச் சட்டத்தில் திருத்தங்கள் ஏற்படுத்தி பிற நாடுகளுக்கு உதவியுள்ளது?

1. லிடியா 2. சுவிட்சர்லாந்து 3. இந்தியா 4. சீனா

81. வெளிக்கொணரப்படாத வெளிநாட்டு வருமானம் மற்றும் சொத்து மசோதா(வரி விதித்தல்) கொண்டுவரப்பட்ட ஆண்டு _______.

1. 2002 2. 1988 3. 2016 4. 2015

82. 'எதுவெல்லாம் பணமாகக் கருதப்படுகிறதோ அவை பணமாக பயன்படுத்தப்படுகிறது' என்பது யாருடைய கூற்று? (NMMS-2020-21)

1. ஸ்டோவ்ஸ்கி 2. இராபர்ட்சன்

3. சர் ஜான் ஹிக்ஸ் 4. ஆடம் ஸ்மித்

83. எந்த மதிப்பிலான ரூபாய் நோட்டினை முதன்முதலாக இந்திய ரிசர்வ் வங்கி வெளியிட்டது? (NMMS 2019-20)

1. ஒரு ரூபாய் நோட்டு 2. இரண்டு ரூபாய் நோட்டு

3. ஐந்து ரூபாய் நோட்டு 4. பத்து ரூபாய் நோட்டு

84. நெகிழிப் பணம் என்பது _______. (NMMS 2019-20)

1. இணைய வங்கி 2. மின்னணு பணம்

3. பற்று அட்டை 4. மின் வங்கி

LIVEWORKSHEETS